தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

இன்று வேலூர், திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று வேலூர், திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
14.04.2026 (செவ்வாய்க்கிழமை)		
மாலை 5 மணி	**வேலூர்** (பொதுக்கூட்டம்)	வேலூர், காட்பாடி, அணைகட்டு, கீழ்வைத்தியநாதன்குப்பம், குடியாத்தம்
மாலை 7 மணி	**திருப்பத்தூர்** - மண்டலவாடி மைதானம் (பொதுக்கூட்டம்)	திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை
15.04.2026 (புதன்கிழமை)		
மாலை 5 மணி	**காரிமங்கலம்** - பெரியாம்பட்டி (பொதுக்கூட்டம்)	பாலக்கோடு, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர்
மாலை 7 மணி	**சேலம்** - தேசிய நெடுஞ்சாலை, சீலநாயக்கன்பட்டி (பொதுக்கூட்டம்)	சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி

16.04.2026 (வியாழக்கிழமை)		
மாலை 5 மணி	**நாமக்கல்** - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்)	நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு
மாலை 7 மணி	**பெரம்பலூர்** - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்)	பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம்

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமெனகண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

தலைமைக் கழகம்,
தி.மு.க.

நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி பகுதிகளில்

கழக வேட்பாளர் கே.எம்.ராஜு வாக்கு சேகரிப்பு!

கொறடா கா.இராமச்சந்திரன் தலைமையில்!

நீலகிரி, ஏப். 14 - நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி நகராட்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கழக வெற்றி வேட்பாளர் கே.எம்.ராஜு அரசு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில், அவருக்கு பெண்கள் தரப்பில் இருந்து உற்சாகமான ஆதரவு வெளிப்பட்டுள்ளது.

பிரச்சாரத்தின் போது, பல்வேறு பகுதிகளில் பெண்கள் கே.எம்.ராஜுவ வரவேற்று, வெற்றி திலகமிட்டு "உங்களுக்கு எங்கள் வாக்கு உறுதி" என ஆதரவு தெரிவித்தனர்.

இது அப்பகுதியில் தி.மு.க.விற்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளது.

கோத்தகிரி அரக்கம்பை, குண்டாடா உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை சந்தித்த அவர், தி.மு.க. அரசின் மக்கள் நலத் திட்டங்கள், சமூக பாதுகாப்பு முயற்சிகள் மற்றும் கடந்த ஆட்சியின் சாதனைகள் குறித்து விரிவாக விளக்கினார். "இந்த முன்னேற்றம் தொடர உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

இந்த வாக்கு சேகரிப்பில், கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லைக்கண்ணன், செயற்குழு உறுப்பினர் எக்ஸ்போ செந்தில் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி கிளைச் செயலாளர்கள் பலரும் கலந்து கொண்டு பிரச்சாரத்தை முன்னெடுத்தனர்.

மேலும், சில இடங்களில் பொதுமக்கள் பட்டாசுகள் வெடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதன் மூலம் கோத்தகிரி பகுதிகளில் தேர்தல் களம் பரபரப்பாக மாறி வருகிறது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள், வீராங்கனைகள் கூட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் அறிமுக கூட்டம் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சி.ஆர்.ராமச்சந்திரன், பா.அருண்குமார் உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.